OS.No.310/2013 – 4.11.2023

PW1 – ராமசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17 மற்றும் 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

5.9.1960 ல் எனது தகப்பனாரான நல்லி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டரும் நல்லா கவுண்டரும் சேர்ந்து அர்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டருக்கு மொத்த சொத்தில் 4 ல் 1 பங்கை கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போது அவருக்கு பாத்தியமான 4 ல் 1 பங்கு சொத்தில் பாதியை அர்த்தனாரி கவுண்டர் மகன் செங்கோட கவுண்டருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளதால் எனக்கு மொத்த சொத்தில் 8 ல் 1 பங்கு சொத்துதான் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் மொத்தத்தில் 85 செண்ட் நிலம் விற்றது போக 8 ல் 1 பங்கு பாகம் மட்டும்தான் வழக்கு சொத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 63 ஆண்டுகள் கழித்து 1960 ம் ஆண்டு ஆவணத்தை (வா.சா.ஆ 1) அடிப்படையாக கொண்டு பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொருவரும் அவரவர் பட்டாவிற்கு ஏற்ப அவரவர் நிலத்தில் கல்கட்டு கட்டி தனி சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

1970 க்கு முன்பே அர்த்தநாரி கவுண்டன் மகன் செங்கோட கவுண்டர் அவர் உயிருடன் இருக்கும்போது அவரது மகன்களான 1,2 பிரதிவாதிகளுக்கு அவரது சொத்தை பிரித்து கொடுத்துவிட்டார் என்றும், அதன் அடிப்படையில் 1974 ல் 1,2 பிரதிவாதிகளை பொறுத்து தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. 1960 ம் ஆண்டு வாங்கிய மூலப்பத்திரத்தின் அடிப்படையில் அதற்குரிய பாகஸ்தர்கள் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டு 1984 ல் அனைவருக்கும் தனித்தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி நான் தாவா சொத்தில் ஒரு பகுதியை நல்லா கவுண்டரின் வாரிசுகளிடமிருந்து வாங்கினேன் என்றால் சரி. வழக்கு சொத்தில் நல்லா கவுண்டரின் வகையராவிற்கு தாவா சொத்தில் பாகம் உள்ளதா என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தில் சொத்தின் 4 பக்கங்களுக்கும் சக்குபந்தி போட்டுதான் கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. 1972 ல் நான் பெற்ற வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தின்படி சர்வே எண்.110/1 ல் ஒரு ஏக்கர் 7 செண்ட்டும், 110/4 ல் 20.1/2 செண்ட்டும் 110/5 ல் ஒரு ஏக்கர் 31 செண்ட்டும், 110/6 ல், 18 செண்ட்டும் ஆக மொத்தம் 2 ஏக்கர் 76 செண்ட் நிலம் நான் விலைக்கு வாங்கி உள்ளேன் என்றால் எனக்குத் தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.